

## 10. அழகுத் தோட்டம்

தோட்டத்திலே வண்ணப்பூவும்
பூத்துக் குலுங்குது
பார்த்ததுமே சின்னத்தேனீ
பாட்டுப் பாடுது

பசுமையான புல்லைத்தேடி
மாடும் மேயுது
பக்கத்திலே கன்றுக்குட்டி
துள்ளி ஓடுது

உயரமான மரத்தினிலே
பழமும் தொங்குது
பச்சைக்கிளி பறந்துவந்து
கொத்தப் பார்க்குது

அழகுத்தோட்டம் பார்க்கும்போதே
நம்மை இழுக்குது
ஆட்டம்ஆடி பாட்டுப்பாட
ஆசை பொங்குது.

**பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க**



2nd_std_2nd_term_tamil.indd 65 05/01/2022 12:23:06

# பயிற்சி

## ஒலித்துப் பழகுக

பூத்துக் குலுங்குது | பாட்டுப் பாடுது | துள்ளி ஓடுது

மாடும் மேயுது | பழமும் தொங்குது | கொத்தப் பார்க்குது

நம்மை இழுக்குது | ஆசை பொங்குது


## படித்தும் எழுதியும் பழகுக

ஆசை | சின்னத்தேனீ

பச்சைக்கிளி | கன்றுக்குட்டி | தோட்டம்

## படத்தை உரிய சொல்லுடன் இணைக்க











- பச்சைக்கிளி
- வண்ணப்பூ
- சின்னத்தேனீ
- பசும்புல்
- உயரமான மரம்

## பேசுவோம் வாங்க!

அழகுத்தோட்டத்தில் எவையெல்லாம் இருந்தன?

## உனக்குப் பிடித்த வருணனைத் தொடரைக் ✓ குறியிடுக




- இனிப்புப் பழம் ☐
- பழுத்த பழம் ☐
- சிவந்த பழம் ☐



- ☐ நல்ல நாய்க்குட்டி
- ☐ சின்ன நாய் குட்டி
- ☐ கருப்பு நாய்க்குட்டி



- வட்ட நிலா ☐
- முழு நிலா ☐
- வெள்ளை நிலா ☐



- ☐ ஆடும் மயில்
- ☐ அழகு மயில்
- ☐ வண்ண மயில்

## படத்திற்குப் பொருத்தமான வருணனைத் தொடரை எழுதுக












2nd_std_2nd_term_tamil.indd 67 05/01/2022 12:23:27

# சொல்லோடு விளையாடு




குரங்கு → குருவி → விறகு → கும்மி → மிளகு

## உரிய எழுத்தை எழுதி நிரப்புக



ஆமை    மைனா



எறும்___    ___றா



கு___    ___க்குட்டை

## முடியும் எழுத்தில் தொடங்கும் சொல்லை எழுதுக

| | |
|---|---|
| சிறகு → ___ | அடுப்பு → ___ |
| சிரிப்பு → ___ | அம்மி → ___ |

புகை
மிளகு
புத்தாடை
குயில்



2nd_std_2nd_term_tamil.indd 68 05/01/2022 12:23:29

# விரலோவியம்

நீங்களும் செய்து மகிழுங்கள்







2nd_std_2nd_term_tamil.indd 69 05/01/2022 12:23:31